4. அரசினர் தீர்மானம்

விதி 32-(i)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அரசினர் அலுவல்கள் எடுத்துக் கொள்ளப் பெறவேண்டுமென்ற தீர்மானத்தை மாண்புமிகு முன்னவர் அவர்கள் மொழிவார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32 (i)ஐ தளர்த்தி, இப் பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்''

திரு. ரா. உமாநாத் : இன்றைக்கு என்று சொன்னால், ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். பார்லிமெண்ட் ரூல்ஸ் உங்களுக்குத் தெரியும். அங்கு ரெகுலராக ஒவ்வொரு வாரமும் நடக்கும். அந்த அளவு 'ஆப்பர்சூனிட்டி' நமக்கு இந்த அவையில் இல்லை. அது ரொம்பவும் ரெஸ்டிரிக்டடாக இருக்கிறது. இதனுடைய விளைவு அசெம்பிளி கான்ஸ்டிடியூட் ஆன பிறகு பிரைவேட் மெம்பர் ரெசல்யூஷனில் விவாதம் ஒரே ஒரு நாள் தான் நடந்து இருக்கிறது. இது வரையில் இரண்டு செஷன்ஸ் நடந்துவிட்டது. இன்னொரு வியாழக்கிழமை என்பது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவை 12-00 மணிக்குக் கூட்டியிருக்கிறேன். தனிநபர் தீர்மானத்தின் முக்கியத்துவத்தை நான் உணர்கிறேன். அதற்கு ஒரு நாள் வைத்துக் கொள்ளலாம். எல்லாக் கட்சியின் தலைவர்களையும் கலந்து, அவர்களுடைய எண்ணத்தையும் அறிந்து ஒரு நாள் வைத்துக் கொள்ளலாம்.

திரு. ரா. உமாநாத் : இவ்வளவு ரெஸ்ட்ரிக்ட்டாக இருக்கக் கூடிய இந்த 'டென்டென்சி' கூடாது. ரூல்சை ஸ்ட்ராங்காக என்போர்ஸ் பண்ண வேண்டும். ரூல்சில் தெளிவாகப் போட்டப் பட்டிருக்கிறது.

''provided further that on a motion made by a Minister for the suspension of this rule, the Assembly may resolve to give precedence, to Government business even on those Thursdays on which Private Member's business has precedence under this rule ;—

1981 பிப்ரவரி 26] [திரு. ரா. உமாநாத்]

Provided further that where a Thursday has been taken over for the transaction of Government business under the above proviso, the Speaker may allot an other day in lieu there of, in the same or subsequent week for the Private Members business."

என்று இருக்கிறது. இதற்குப் பதில் மற்றொரு வியாழக்கிழமை என்பது கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் எல்லாக் கட்சித் தலைவர்களின் எண்ணத்தையும் அறிந்து செய்கிறேன்.

பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32 (1) ஐத் தளர்த்தி, இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

2. ஒழுங்குப் பிரச்சினை

(ஆ) விதி 108(1) இன் கீழ் திருத்த அறிக்கை அவைமுன் வைக்கப் பெறுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 107-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பாக அறிக்கை ஒன்றினை மாண்புமிகு முன்னவர் அவர்கள் அளிப்பார்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பாக இந்த அறிக்கையை இங்கே வைக்கிறேன்.

*** *** ***

(முற்பகல் 11-10.)

திரு. ரா. உமாநாத்: இந்தக் கரெக்ஷன் ஸ்டேட்மெண்ட் மேலே பாயிண்ட் ஆப் ஆர்டர். ரூல் 108-இல் தெளிவாக எழுதப் பட்டிருக்கிறது.

Rule 108 (1)--Copies of the statement proposed to be made by a Minister correcting the answer given by him to a starred/short notice question or any other statement made or placed before the

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப் பெற்றது.